**வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள்

போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 69,119,727 தொகையான வங்கி மேலதிகப்பற்று ரூபா 29,160,605 தொகையான வங்கி மீதிக்கு ஈடுசெய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறை சொத்துக்களின் கீழ் அவற்றை தனித்தனியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் அதிகாரமளிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 (SLFRS 09) இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) இன் பிரகாரம் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் வலையமைப்பினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிச் சொத்துக்கள் இனங்காணப்படும் போது சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் காசுப்பாய்ச்சல் ஆகியவற்றிற்கான நிறுவனத்தின் வணிக மாதிரியின் அடிப்படையில் இது காட்டப்பட்டுள்ளது. | வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளை காண்பிக்கும் போது தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நிதிச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் வகைப்படுத்தப்பட்டன. ஆபத்து தனித்தனியாக இனங்காணப்பட்டு, ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு, நிறுவனம் நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியில் காட்டப்பட்டது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 18 ஆ பந்தியின் பிரகாரம் நேரில் முறையில் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசுப்பாய்ச்சலை கணிப்பீடு செய்வதற்கு வரிக்கு முன்னரான இலாபம் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் ரூபா 329,653,045 தொகையான விரிவான வருமானத்தை சீராக்கம் செய்த பின்னரான நட்டம் வலையமைப்பால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான காசுப்பாயச்சல் ரூபா 14,058,366 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | IFRS இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை உருவாக்கும் போது ஏனைய விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானம் தனித்தனியாக காட்டப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் செயற்பாட்டு இலாபத்தை கணிப்பிடும் போது விரிவான வருமானம் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 24, (LKAS 24) இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் தொடர்புடைய உரிய தகவல்கள் வலையமைப்பால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 (SLFRS 15) இன் பிரகாரம் வாடிக்கையாளர்களுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் இருந்து உருவான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஒப்பந்தக் கடன்பட்டோர் மற்றும் ஒப்பந்தக் கடன்கொடுத்தோராக தனித்தனியாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் எதிர் வணிக (contra deal) உடன்படிக்கைகளிலிருந்து உருவான ரூபா 28,824,028 கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 69,702,230 கடன்கொடுத்தோர் மீதி என்பன நிதி நிலைமைக் கூற்றில் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் மற்றும் பிற்போடப்பட்ட வருமானத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளன. | எதிர்காலத்தில் தனித்தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொர்டர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆம் ஆண்டிற்கான வலையமைப்பின் பங்கு மூலதனம் ரூபா 3,198,499,721 ஆக காணப்பட்டதுடன் இது 2021 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நட்டம் ரூபா 107,189,266 ஆக காணப்பட்டதுடன் சுயாதீன தொலைக்காட்சியின் நட்டம் ரூபா 238,131,346 ஆகவும், ITN FM இன் நட்டம் ரூபா 41,325,521 ஆகவும், வசந்தம் FM இன் நட்டம் ரூபா 10,455,852 ஆகவும் வசந்தம் தொலைக்காட்சிக்கு ரூபா 46,337,505 மானியமாக பெறப்பட்ட பின்னர் வசந்தம் தொலைக்காட்சியின் நட்டம் ரூபா 26,061,682 ஆகவும் காணப்பட்டன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் மொத்த நட்டம் ரூபா 315,974,401 ஆக காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தொடர் நட்டத்தை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒரு வருடத்தை விஞ்சியிருந்த வலையமைப்பின் கடன்பட்டோர் மீதி ரூபா 371,580,502 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 2,531,970 இற்காக மாத்திரமே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தற்போது குறிப்பிட்ட அளவு பணம் பெறப்பட்டு வருகின்றதுடன் அறவிடப்படக்கூடிய பணம் அனைத்தையும் சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த தொகையில் ரூபா 6.5 மில்லியனிற்காக சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தன. மேலதிக சட்ட நடவடிக்கைக்காக இன்னொரு ரூபா 26 மில்லியன் பணம் சட்டப் பிரிவுக்கு அனுப்பப்பட்ட போதிலும் சில சட்டச் சிக்கல்கள் காணப்படுகின்றதுடன் இவ் விடயத்தை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சட்டப்பூர்வமாக அறவீடு செய்தல் நீண்ட காலச் செயன்முறையாக காணப்படுவதால் ஒவ்வொரு முறையும் தவணைப்பணமாகவேனும் பணத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆவணங்கள் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட சிறு வாடிக்கையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதுடன் நிறுவனத்திற்கு தொடர்ந்து விளம்பரங்களைக் கொண்டு வருவதால் பெரிய முகவராண்மைகளுக்கு எதிராக பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகளை எடுப்பது கடினம். இந்த வணிகமானது பல முக்கிய முகவராண்மைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வாடிக்கையாளர்களை சார்ந்திருப்பதால் இந்த நிலைமை ஏற்பட்டது. | கடன்பட்டோர் மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆவணங்கள் முறையாகப் பேணப்பட வேண்டியதுடன் பெறவேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான எதிர் வணிக கடன்பட்டோர் மீதி ரூபா 28,824,029 ஆக காணப்பட்டதுடன் உரிய | இந்த எதிர் வணிக கடன்பட்டோர் மீதி 5 ஆண்டுகளை விஞ்சியிருந்ததால் கணக்கீட்டின் பிரகாரம் குறித்த மீதிக்காக நட்டக்கழிவிடப்பட்டது. | எதிர் வணிக உடன்படிக்கைகளிற்குரிய சேவைகளை தாமதமின்றி மீட்டெடுப்பதற்கு |

| | | |
|---|---|---|
| சேவைகள் வலையமைப்பால் பெறப்பட்டிருக்காததால் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்த எதிர் வணிக கடன்பட்டோரின் மொத்த மீதியான ரூபா 14,641,728 இற்காக நிதியாண்டில் நட்டக்கழிவிடப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 69,702,230 தொகையான பிற்போடப்பட்ட வருமான மீதியில் 5 ஆண்டுகளுக்கும் குறைவான ரூபா 22,725,000 தொகையான மீதி, 05 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலத்திற்கு இடைப்பட்ட ரூபா 45,379,753 தொகையான மீதி மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,597,477 தொகையான மீதி என்பன உள்ளடங்கியிருந்தன. எனினும், மீளாய்வாண்டிலும் அத்தகைய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரை மற்றும் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டவாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கும் மேலான மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிற்போடப்பட்ட வருமான மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 127,240,756 தொகையான சேவைநாடும் கடன்பட்டோர் மீதியில் உள்ளடங்கிய ரூபா 41,470,241 தொகையான மீதி 10 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதிலும் குறித்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் குறித்த மீதியில் உள்ளடங்கிய பல மீதிகள் சரியாக இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டதுடன் அதேபோன்று நடைமுறை ஆண்டில் அதனைக் கண்டறிந்து சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சேவைநாடுநர் முற்பண மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 5,718,320 தொகையான இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக முன்கொண்டு வரப்பட்ட ரூபா 2,644,085 பெறுமதியான 242 காசோலைகள் மற்றும் 02 முதல் 03 ஆண்டுகள் வரையான காலமாக முன்கொண்டு வரப்பட்ட | கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் குழுவின் பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் எனள்பவற்றின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் இரத்து செய்யப்பட்ட காசோலைகள் கணக்கில் 2017.12.31 இற்கு முன்னர் இரத்து செய்யப்பட்ட | இரத்து செய்யப்பட்ட காசோலைகள் கணக்கின் மீதி இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 2,485,466 பெறுமதியான 239 காசோலைகள் தொடர்பான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காசோலைகளின் பெறுமதியாக ரூபா 5,485,708/12 தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. மேலும் 2022 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்ட காசோலைகள் கணக்கின் மீதியிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மேலாக இரத்து செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதியை பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| (i) 3.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது ரூபா 348,708 பெறுமதியான 2,505 லீற்றர் எரிபொருள் மற்றும் ரூபா 167,292 பெறுமதியான 1,207 லீற்றர் எரிபொருள் முறையே வலையமைப்பின் பிரதிப் பொது முகாமையாளர் (செய்திகள்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ஆகியோரால் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறி பெறப்பட்டுள்ளன. | பிரதிப் பொது முகாமையாளர் (செய்திகள்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ஆகியோரின் கடமையின் தன்மை காரணமாக அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறி எரிபொருள் பெறப்பட வேண்டியிருந்தது. 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தலைவரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 சனவரி 27 ஆம் திகதிய பிஈடி 1/2020 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி | (i) தலைவரின் உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக வாடகை வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | டன் ரூபா 1,088,897 பெறுமதியான 6,347 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டுள்ள அதே நேரம் ரூபா 3,438,685 தொகை வாடகையாக செலுத்தப்பட்டுள்ளது. | | |
| | | (ii) சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தலைவர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரம்பு 1,800 லீற்றராக உள்ள போதிலும் ரூபா 1,035,828 பெறுமதியான 6,025 லீற்றர் எரிபொருள் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறி வழங்கப்பட்டுள்ளது. | தலைவரின் கடமையின் தன்மை காரணமாக எரிபொருள் வரம்பு அதிகரித்துள்ளது. ஒரு கம்பனியாக பணிப்பாளர் சபையின் அதிகாரத்தின் அடிப்படையில் 2020 சனவரி முதல் தலைவரின் மேலதிக எரிபொருள் பயன்பாட்டிற்காக சபை கூட்டக் குறிப்புத் தாள் இல. 33/334 இன் கீழ் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய பிஈடி 03/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2020 ஆம் நிதியாண்டில் நட்டத்தை அறிக்கையிட்டிருந்ததும் 2021 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும் போது நட்டம் குறைவடைந்திருக்காததுமான அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளில் நபர் ஒருவரிற்கு மிகையூதியமாக ரூபா 3000 தொகை செலுத்த முடிந்த போதிலும் குறித்த தேவைப்பாட்டிற்கு முரணாக ஒவ்வொன்றும் ரூபா 3,000 எல்லையை மீறி மீளாய்வாண்டில் ரூபா 13,027,000 தொகை மிகையூதியமாக வலையமைப்பால் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் 3 ஆம் இலக்க மிகையூதியத்தின் பிரகாரம் பொதுக் கூட்டுத்தாபனம் மற்றும் முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் பதவியணியினரிற்கு ஒவ்வொன்றும் ரூபா 5,000 தொகை செலுத்தப்பட முடியும். அடிப்படை 3 இன் கீழ் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நட்டம் குறைவடைந்த நிறுவனத்தால் ரூபா 5,000 செலுத்தப்பட முடியும் என்பதால் ஒவ்வொன்றும் ரூபா 5,000 படி மிகையூதியம் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் நிலையான வைப்புக்கு எதிராக ரூபா 75 மில்லியன் மேலதிகப்பற்றிற்கான வரம்புக்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மேலதிகப்பற்று மீதி ரூபா 69,119,727 | கருத்துரை வழங்கப்படவில்லை. | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் மேலதிகப்பற்று வசதிகள் பெறப்பட்டு செலவினங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | தொகையாக காணப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் தொடர்ச்சியான 7 மாதங்களில் வங்கிமேலதிகப்பற்றின் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறுகின்ற மேலதிகப்பற்றிற்கு வட்டியாக ரூபா 3,593,733 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | | முகாமை செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான வலையமைப்பின் தொழிற்படு மூலதனம் ரூபா 620,761,280 ஆக காணப்பட்டதுடன் இது 2021 ஆம் ஆண்டில் ரூபா 399,833,265 வரை குறைவடைந்துள்ளது. அதன் பிரகாரம் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்தின் பலவீனங்கள் காரணமாக, அன்றாட நிதித் தேவைப்பாட்டின் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நடைமுறையில் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்தில், மீளாய்வாண்டிற்கான நிதி பாதீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் காலாண்டுக்கு ஒருமுறை காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை முன்னறிவித்து காசுப்பாய்ச்சல்கள் திட்டமிடப்பட வேண்டும். எனினும், அத்தகைய பாதீட்டுக் கட்டுப்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒரு பொதுவான சந்தை நிலைமையை எதிர்பார்த்து வருமானம் எதிர்வுகூறப்பட்ட போதிலும் கொவிட் தொற்றுநோய் நிலவியதால் சந்தையில் பெரும் வேறுபாடுகள் காணப்பட்டன. ஆகையால் 2021 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள முடியவில்லை. எனினும் நிலையான வைப்புகளைப் பயன்படுத்தாமலேயே நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்திருந்தது. இதனால் நிதி பாதீட்டை தயாரிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. | மூலதன முகாமைத்துவத்தில் உள்ள பலவீனங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பாதீட்டுக் கட்டுப்பாட்டின் சரியான முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 330,032,837 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 213,974,507 ஆக இருந்தது. அதன் பிரகாரம் செலவினங்கள் அதிகரித்தமை மற்றும் வருமானம் குறைவடைந்தமை என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட ரூபா 116,058,330 வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன முறையே 1.44 மற்றும் 1.43 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டுக்கான தேறியலாப விகிதம் -23 ஆக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5 சதவீத அதிகரிப்பை பிரதிபலிக்கிறது. விற்பனை வருமானத்திற்கான தொழிற்படு மூலதன விகிதம் 1.67 ஆல் தேய்வடைந்துள்ளதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொழிற்படு மூலதனச் செலவின சதவீதம் 4 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. சந்தையின் போட்டி, பாதகமான ஆரம்ப நிதி விகிதங்கள், தொடர்ச்சியான கணிசமான செயற்பாட்டு நட்டங்கள் மற்றும் திறமையற்ற அதிக எண்ணிக்கையிலான ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் போன்ற காரணங்களால் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையில் எதிர்கால ஆபத்திற்கான சாத்தியத்தன்மை காணப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் வலையமைப்பால் கொள்வனவு செய்யப்பட்ட 8 உள்ளூர் தொலைக்காட்சி நாடகங்களில் இருந்து ரூபா 18,348,836 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் ''சத் வர்ஷா'' என்ற தொலைக்காட்சி நாடகம் ஒளிபரப்புவதற்கு பொருத்தமற்றதென முன் பார்வைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் தயாரிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டின் பிரகாரம் மீண்டும் நியமிக்கப்பட்ட முன் பார்வைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இது ஒளிபரப்பப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக ரூபா 5,100,506 நட்டம் செலுத்த வேண்டியிருந்தது. | ”சத் வர்ஷா” என்ற தொலைக்காட்சி நாடகம் முழுமையாக திருத்தப்பட்டு மேன்முறையீட்டு சபைக்கு அனுப்பப்பட்டது.<br>பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒரு சிறந்த நாடகமாக தொலைக்காட்சி நாடகம் மேன்முறையீட்டு சபையால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இந்த தொலைக்காட்சி நாடகம் பொதுவாக வழங்கப்படும் விலைவிகிதத்தை விட குறைந்த விலைவிகிதத்தில் அதாவது ரூபா 150,000 செலுத்தி கொள்வனவு செய்து ஒளிபரப்பப்பட்டது. எனினும் மாலை 6 மணிக்கு ஒளிபரப்பான நேரத்தில் குறைந்த வருமானம் காரணமாக இந்த தொலைக்காட்சி நாடகத்தில் நட்டம் ஏற்பட்டது. | தொலைக்காட்சி நாடகங்கள் மூலம் ஈட்டக்கூடிய இலாபத்தை அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கையில் ஊடகங்கள் மூலம் திரைப்படங்களை காட்சிப்படுத்துவதற்கு, விநியோகிப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு கம்பனியின் உரிமையை மீறியமைக்கு எதிராக மூன்று அவதூறு வழக்குகள், 06 சட்ட வழக்குகள் மற்றும் 06 திரைப்பட புலமைச் சொத்து வழக்குகள், பணிநீக்கம், சேவை நிறுத்தம் மற்றும் கட்டாய ஓய்வு தொடர்பான 05 வழக்குகள் மற்றும் ஏனைய விடயங்களுக்காக 04 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வழக்குகளுக்கு கோரப்பட்ட இழப்பீடு ரூபா 741,650,000 அக காணப்பட்டது. மிளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இந்த வழக்குகள் தொடர்பாக ரூபா 1,036,494 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த 23 சட்ட வழக்குகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நீதிமன்றத்தால் இழப்பீடு செலுத்தப்படவதற்கு உத்தரவிடப்பட்டால், அதற்கான இழப்பீட்டுக்கான ஏற்பாடு சம்பந்தப்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்படும். | வலையமைப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதுமான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டியதடன் குறுகிய கால நிதி இயலளவு குறையாமல் இருப்பதை உறுதிப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான வான்கால வருமானத்தில் ரூபா 10,130,000 பெறுமதியான ஊழியர்களுக்கான பரிசு உறுதிச்சீட்டுக்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் எதிர் வணிகத்தின் மூலம் வான்கால வருமானம் பெறப்பட்டிருந்த போதிலும் வலையமைப்பிற்கு காசு உட்பாய்ச்சல் பெறப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, விற்பனை வருமானம் ரூபா 257,569,354 ஆல் அதிகரித்திருந்த போதிலும் தேறிய தொழிற்படு மூலதனம் ரூபா 220,928,015 ஆல் குறைவடைந்துள்ளது. அதன் பிரகாரம் விற்பனை வருமானத்திற்கான தேறிய தொழிற்படு மூலதன விகிதம் 1.85 ஆக இருந்த போதிலும் இது மீளாய்வாண்டில் 3.52 வரை அதிகரித்துள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | எதிர்காலத்தில் திரவத்தன்மை பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வலையமைப்பால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,588,500 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட hot swappable power distribution இறாக்கை மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,218,274 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட aros flexus FT – 30 30KVA UPS முறைமை என்பன முறையே கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்தும் 3 ஆண்டுகளிலிருந்தும் விளைவற்றிருந்தன. | hot swappable power distribution இறாக்கை நிறுவப்பட்ட போதிலும் அது தொடர்பான உபகரணங்களுக்கான இறக்குமதியை கட்டுப்படுத்தும் அரசாங்கக் கொள்கை மற்றும் நிறுவனத்தில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக அதனை செயற்படுத்த முடியவில்லை. 30 KVA ups முறைமை இடி தாக்குதலால் செயலிழந்திருந்ததுடன் காப்புறுதி உரிமைகோரலைப் பெற்றுக்கொள்வதற்கு 1 ½ ஆண்டுகளுக்கு மேல் எடுத்தது. அதன் பின்னர் இறக்குமதியின் வரம்பு காரணமாக ஏறத்தாழ ஒரு வருட காலப்பகுதி கடந்திருந்தது. தற்போதைய டொலர் நெருக்கடி நிலைமையின் காரணமாக இந்த இறாக்கைக்குரிய உதிரிப் பாகங்கள் வழங்கப்பட முடியாதிருந்தன. | வளங்களை முறையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அரசாங்க நிறுவனங்களின் வேலை மற்றும் வழங்கல் சேவைகளுக்கு அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் நடைபெற்ற "ஆசியா ஸ்டார் கலா" என்ற இசை நிகழ்ச்சியின் நிகழ்வு முகாமைத்துவத்திற்காக பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்படாமல் ரூபா 11,000,000 மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு வழங்குநர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் பெறுகையின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் குறைந்தபட்ச செலவில் அதிகபட்ச பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மற்றும் தகுதியுள்ள தரப்பினருக்கு நியாயமான மற்றும் அதிகபட்ச வாய்ப்பை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் இருக்கும் தன்மையை இணையத்தில் உறுதிப்படுத்த முடியவில்லை.<br>அரசாங்க நிறுவனங்களின் வேலை மற்றும் வழங்கல் சேவைகளுக்கு அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் நடைபெற்ற "ஆசியா ஸ்டார் கலா" என்ற இசை நிகழ்ச்சியின் நிகழ்வு முகாமைத்துவத்திற்காக பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்படாமல் ரூபா 11,000,000 மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு வழங்குநர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் பெறுகையின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் குறைந்தபட்ச செலவில் அதிகபட்ச பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மற்றும் தகுதியுள்ள தரப்பினருக்கு நியாயமான மற்றும் அதிகபட்ச வாய்ப்பை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் இருக்கும் தன்மையை இணையத்தில் உறுதிப்படுத்த முடியவில்லை. | இதன் மூலம் ஏறத்தாழ ரூபா 30 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டதுடன் கிரயம் ஏறத்தாழ ரூபா 15 மில்லியனாகும். இது போன்ற விசேட நிகழ்ச்சித்திட்டங்களை பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் தொடர முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி எமது நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டதுடன் இந்த நிகழ்ச்சியின் நிகழ்வு முகாமைத்துவத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டலை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வலையமைப்பின் தொடர்ச்சியான நட்டங்கள் மற்றும் தொழிற்படு மூலதனச் சிக்கல்களின் சூழ்நிலையில், ஆளணி முகாமைத்துவத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் வலையமைப்பால் ஒப்பந்த அடிப்படையில் 2 ஊழியர்களும் நாளாந்த அடிப்படையில் 16 ஊழியர்களும் என ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அறுபத்தி ஏழு ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விட அதிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தரை தொடர்ந்தும் வைத்திருப்பதால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத பதவிகளுக்கு 113 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும் 13 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் நிரந்தர பதவிகளின் வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். | பதவிகள் தேவைப்பாட்டின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர்களை வைத்திருப்பதற்காக அக் காலத்தில் நிறுவனங்களில் உள்ள பதவிகளுக்கு முன்னர் சேவை செய்த உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டது,<br><br>மேலும், புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் உள்வாங்கத் தகுதியில்லாத ஊழியர்களுக்கு பதவியை தக்கவைத்து தொடர வேண்டும் என்றும் உத்தியோகத்தர் பதவி உயர்வு அல்லது ஓய்வு பெற்றால் அந்த பதவியை இரத்து செய்ய வேண்டும் என்றும் 2018.05.08 ஆம் திகதிய கடிதத்தின் 06 ஆம் இலக்கத்தின் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெரிவித்திருந்தது. அத்துடன் குறித்த பதவிகளிற்கு புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படக்கூடாது.<br><br>அதற்கிணங்க புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் உள்வாங்குவதற்குத் தகுதியில்லாத பதவியணியினரை அவர்கள் ஓய்வு பெறும் வரை அல்லது பதவி விலகும் செய்யும் வரை அப்படியே வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அவர்கள் பதவி விலகிய அல்லது ஓய்வுபெற்ற பின்னர் அப் பதவி இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு இணங்க மனித வளங்கள் முகாமை செய்யப்பட வேண்டியதடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு மாத்திரமே ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |